FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364106

1. District : ஈரோடு மாவட்டம் PS: ஊ.மு.க பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No. 08/AC/2026 முத.அ. எண் Date: 23.09.2026 நாள் 13.30 hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a), 12 r/w 7(d)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.09.2026 Date to : நாள் வரை 22.09.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2026 Time : நேரம் 10.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD-VOL II 23.09.2026 Time : நேரம் 13.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சித்தியமங்கலம் நகராட்சி அலுவலகம், சுமார் 70 கி.மீ. மேற்கு
Beat Number : முதற் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறைப்பட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் G.B. ஜாகீர் உசேன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் G.B. பாசு
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.07.1969 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வட்டாட்சியர் (g) Address : முகவரி சிறப்பு அலுவலர்/ வட்டாட்சியர், மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் கோப்புக்கு உதவியாளர், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tmt. நிருத்தணாதேவி, இவர்கீர், சித்தியமங்கலம் நகராட்சி அலுவலகம், ஈரோடு மாவட்டம்.
2. Tr. ரங்கநாயகி, தட்டுனர், சித்தியமங்கலம் நகராட்சி அலுவலகம். ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறைப்பட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.09.2026 15.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ராஜா
Rank: நிலை தலைமை காவலர்,
அ. கு. க. பிரிவு,
சேலம்.

Attachment to Column 12 of Erode V&AC, Cr.No.08/AC/2026, u/s 7(a),12r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018

சமர்பிக்கப்படுகிறது:

இன்று 23.09.2026 ஆம் தேதி 10.30 மணிக்கு திரு. G.B. ஜாகீர்உசேன், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர்/ மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ஈரோடு அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர்: திரு. G.B. ஜாகீர்உசேன், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர்/ மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ஈரோடு, ஈரோடு மாவட்டம். அம்மா, 22.09.2026 - ம் தேதி செவ்வாய் கிழமை சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வாடிக்கையாக நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான பில் தொகை விடுவித்தல், எம்-புக்கில் கையெழுத்திடுதல் ஆகியவற்றிற்காக சம்மந்தப்பட்ட டெண்டர் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்றுவருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர்/ மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் G.B.ஜாகீர் உசேன் ஆகிய என் தலைமையில் ஈரோடு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.எம்.ரேகா மற்றும் காவல் குழுவினருடன் சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் மாலை சுமார் 15.30 மணிமுதல் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது அந்த அலுவலக பின்புற ஷட்டர் வழியாக வெளியே சென்ற வெள்ளை நிற சட்டை மற்றும் காக்கி நிற பேண்ட் அணிந்திருந்த நபரை காவல் குழுவினர் மூலம் திரும்ப அழைத்துவந்து அவரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ரங்கசாமி என்றும்,தான் ஆணையரின் அரசு வாகன ஓட்டுநராக பணிபுரிந்துவருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவர் தனது சட்டை மேல் பாக்கெட்டில் இருந்து பத்து 500 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.5,000/- இருந்தது. மேலும் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து இரண்டு 500 ரூபாய் நோட்டு கற்றைகளையும், இடது பக்க பேன்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு 500 ரூபாய் நோட்டு கற்றையும் எடுத்து கொடுத்தார். அவற்றை எண்ணிப்பார்த்தபோது அதில்

(500 X 298) மொத்தம் ரூ.1,49,000/- இருந்தது. மேலும் அந்த பண கட்டுகளுடன் 1,35,000- மேயர், 20,000- பெருந்துறை, 20,000 - சத்தி, 20,000 - புளியம்பட்டி, 20,000 - பவானி என்று எழுதப்பட்டிருந்த ஒரு சிறிய துண்டு சீட்டு காணப்பட்டது. தொகைகள் மற்றும் திரு.ரங்கசாமியை காவல்படுத்தப்பட்டது. மேற்படி தொகைகளை பற்றி ஓட்டுநர் ரங்கசாமியை சிறப்பு ஆய்வுக்குழு அலுவலரான என் முன்னிலையில் விசாரித்தபோது அந்த பணத்தை ஓவர்சீர் திருமதி.நிரஞ்சனாதேவி என்பவர் அவசரமாக தன்னை அழைத்து மூன்று பணக்கட்டுகளை என்னிடம் கொடுத்து வெளியே கொண்டுபோய் வண்டியில் வைக்கும்படி சொன்னதாகவும், அந்த பண கட்டுகளை வாங்கி தனது பேண்ட் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு சென்றதாகவும், அதில் எவ்வளவு பணம் இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், தான் அதனை வண்டியில் வைக்க பின்பக்க வழியாக சென்றுகொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். பின்னர் ஓவர்சீர் திருமதி.நிரஞ்சனாதேவி என்பவரை அழைத்து என் முன்னிலையில் மேற்படி தொகைகள் எதற்காக டிரைவர் ரங்கசாமியிடம் கொடுக்கப்பட்டது என்று விசாரித்தபோது, அவர் தனது பெயர் நிரஞ்சனா தேவி என்றும், தான் இந்த அலுவலகத்தில் சுமார் ஒரு வருடமாக ஓவர்சீராக வேலை செய்துவருவதாகவும், அந்த தொகை தனது சொந்தப்பணம் என்றும், டிரைவர் ரங்கசாமியின் நகை அடமானத்தை மீட்பதற்காக, ரங்கசாமி கேட்டுக்கொண்டதின் பேரில் தன்னால் கடனாக கொடுக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும் அவரிடம் விசாரித்தபோது, மேற்படி தொகை வங்கியிலிருந்தோ, சம்பளத்தில் இருந்தோ எடுக்கப்படவில்லை என்றும், சொந்தமாக வீட்டில் வைத்திருந்த தொகை என்றும் தெரிவித்தார். இதுபற்றி மீண்டும் ரங்கசாமியிடம் விசாரித்தபோது, அவர் தனது நகை அடமானக்கடன் ரூ.81,620/- மட்டும் உள்ளதாகவும், அதன் முடிவு தேதிக்கு சுமார் 20 நாட்கள் உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி தொகைக்கு ஓட்டுநர் ரங்கசாமி மற்றும் ஓவர்சீர் நிரஞ்சனாதேவி ஆகியோர் கூறிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே மேற்படி தொகையானது பொதுமக்கள் அல்லது ஒப்பந்ததாரர்களிடமிருந்து திருமதி.நிரஞ்சனாதேவி அவர்களால் தனக்காகவோ அல்லது பிறருக்காகவோ லஞ்சமாக பெற்று, அதனை மறைத்துவைக்க வேண்டி ஓட்டுநர் ரங்கசாமியிடம் கொடுத்திருக்ககூடும் என்ற சந்தேகத்தின்பேரில், மேற்படி சந்தேகத்திற்கிடமான, சரியான முகாந்திரம் சொல்லப்படாத, நிரஞ்சனாதேவி மற்றும் ரங்கசாமி ஆகியோர் பணத்தை பற்றி கூறிய விபரம் முரண்பாடாக இருந்ததாலும்,

தொகை ரூ.1,54,000/- மற்றும் பணக்கட்டுடன் இருந்த துண்டு சீட்டு ஒன்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், அலுவலகத்தின் வருகை பதிவேடு பார்வையிடப்பட்டதில் பொறியியல் பிரிவிற்கும், பொது பிரிவிற்கும் தனித்தனியாக வருகை பதிவேடு பராமரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. அதில் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோரின் சுருக்கொப்பம் இடப்பட்டு, 2026ம் வருடம் செப்டம்பர் மாதத்திற்கான பக்கங்கள் நகல் எடுக்கப்பட்டு, அலுவலக மேலாளர் திரு.குமார் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் திரு.ரங்கசாமியிடம் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த திடீர் தணிக்கை 22.09.2026 ம் தேதி 15.30 மணிமுதல் 20.30 மணிவரை நடைபெற்றது. இது சம்மந்தமாக எனது நடவடிக்கைகள் நாள். 22.09.2026-ன் படியான நடவடிக்கை குறிப்பு அந்த அலுவலகத்திலேயே தயார் செய்யப்பட்டது. மேலும் இந்த திடீர் ஆய்வில் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை குறிப்பு, கைப்பற்றப்பட்ட தொகை ரூ. 1,54,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். எனவே சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளரின் ஓட்டுநர் ரங்கசாமி மற்றும் ஓவர்சீர் நிரஞ்சனாதேவி ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு, (sd xxxxx) (G.B.ஜாகீர் உசேன்) இடம்: ஈரோடு. நாள். 23.09.2026. இணைப்பு: சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் நாள் 22.09.2026, தொகை ரூ.1,54,000/-,குறிப்புகள் எழுதப்பட்ட துண்டு சீட்டு, ஓட்டுனர் ரங்கசாமியின் வாக்குமூல நகல் மற்றும் ஸ்ரீபாலாஜி பைனான்ஸ்சின் வரவு செலவு பதிவேட்டின் பக்க எண் 163-ன் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் மற்றும் 2026-ம் வருட செப்டம்பர் மாத சத்தியமங்கலம் மாநகராட்சி வருகைபதிவேட்டில் சான்றொப்பமிட்ட நகல்.

Madam,

Received the complaint on 23.09.2026 at 10.30 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Crime No.08/AC/2026, 7(a), 12r/w 7(a)of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018 on 23.09.2026 at 13.30 hrs (sd

xxxxx), 23.09.2026 (M.Rekha), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Erode.

Original FIR along with the original typed complaint and surprise check proceedings of Tr. Jaheerhussain, Special Inspection Cell Officer / Tahsildar, PA to DSO,Erode is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and copy of FIR submitted to Director, Vigilance and Anti-Corruption, Chennai.

23.9.2026

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.